நாள்: 28.07.2025
OS. 38/2018
பெயர் ரஞ்சித்குமார்
வா.சா.1

<u>குறுக்கு விசாரணை</u>

1)நான் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகளை படித்து பார்த்து தான் கையொப்பம் போட்டு உள்ளேன் வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும். எனது தந்தை விவசாயம் மற்றும் பைனான்ஸ் தொழில் செய்து வந்தார் ,நான் என் தந்தைக்கு உதவியாக இருந்தேன் தற்பொழுது விவசாயம் செய்து வருகிறேன். என் தந்தை தேனி மற்றும் மதுரை மாவட்டங்களில் பைனான்ஸ் தொழில் செய்து வந்தார். இவ்வழக்கு பிரதிவாதிகள் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்ததன் மூலம் பழக்கம். என் தந்தை மூலமாகத்தான் எனக்கு பிரதிவாதிகளை தெரியும், என் தந்தை ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தார். 25.12.2016 தேதியில் 19/5 பிள்ளையார் கோவில் தெருவில் உள்ள எங்கள் வீட்டில் வைத்து பிரதிவாதிகள் காலை 11 மணிக்கு ரூ.4,50,000/-கடனாக பெற்றார்கள். பிரதிவாதிகள் எதற்காக கடன் வாங்கினார்கள் என்றால், குடும்ப சூழ்நிலை சிறிது செலவுகள் இருந்ததால் கடன் வாங்கினார்கள் அந்த விவரத்தை புரோநோட்டில் சொல்லி உள்ளேனா என்றால், குடும்பச் செலவிற்கு என சொல்லப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் குடும்ப செலவுக்காகவும் சில்லரை கடன்களை தீர்ப்பதற்காகவும் கடன் வாங்கியதாக வழக்கு புரோநோட்டில் சொல்லப்பட்டுள்ளது, ஆனால், பிராதிலும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் அதே பகுதியில் தான் சொல்லப்பட்டுள்ளது.

2) வா.சா.ஆ.1 புரோநோட்டில் எதற்காக கடன் வாங்கப்பட்டது என்ற விவரம் எழுதப்படவில்லை என்றால் குடும்பச் செலவுக்கு என எழுதப்பட்டுள்ளது.புரோநோட்டில் சில்லரை கடன்களை தீர்ப்பதற்காக வேண்டி வாசகம் இல்லை என்றால் சரிதான். பிராமிசரி நோட்டை தயாளன் என்பவர் எழுதினார். அதில் துரைப்பாண்டி என்பவர் சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார். அவர் தந்தை பெயர் எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் என் தந்தை வழக்கறிப்பு அனுப்பினார் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. என் தந்தை தான் வழக்கு தாக்கல் செய்வதற்கான நடவடிக்கையை எடுத்தார். பிரதிவாதிகள் , தயாளன் கையொப்பம் அவரது பேனாவால் போட்டுள்ளார். சாட்சி கையொப்பம் போட்ட துரைப்பாண்டி அவரது பேனாவால் கையொப்பம் போட்டுள்ளார். பிரதிவாதிகள் புரோநோட்டில் கையொப்பம்போடும்போது நான் எங்கள் வீட்டில் இருந்தேன். வழக்கு புரோநோட்டில் உள்ளது பிரதிவாதிகளின் கையொப்பம் அல்ல என்றும், என் தந்தை அவர்களது கையொப்பத்தை மோசடியாக உற்பத்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் அதனால் நான்

கையெழுத்தை நிரூபணம் செய்ய வல்லுநர் ஆய்வுக்கு நடவடிக்கை எடுக்க தயாராக உள்ளேன் என்றால் உள்ளேன். என் தந்தை தாக்கல் செய்த வழக்கில் யார் யார் மூலமாக பணத்தை பிரதிவாதியிடமிருந்து திரும்ப கேட்டார் இந்த விவரத்தை சொல்லவில்லை நானும் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் யார் மூலமாக பணத்தை திரும்ப கேட்டேன் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். 25.12.2016 முதல் 24.01.2018 வரை வட்டி பிராதியில் கோரியுள்ளோம். 25.01.2018 முதல் 22.02.2018 வரை எதற்காக வட்டி கேட்கவில்லை என்றால் என் தந்தை மனசாட்சிக்கு உட்பட்டு ஒரு சதவீத வட்டி கிடைத்தால் போதும் என 24.1 .2018 வரை மட்டுமே வட்டி கிடைத்தால் போதும் என இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். வட்டி தொழில் செய்து வருபவர்கள் எந்த சூழ்நிலையிலும் வட்டியை விட்டுக் கொடுக்க மாட்டார்கள் என்றும், ஆனால் நாங்கள் வட்டி தள்ளுபடி செய்ததாக சொல்வது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை என்றால் சரியல்ல. என் தந்தை மதுரையில் பைனான்ஸ் தொழில் செய்து வந்தார் என்றும் அங்கு அங்கு மாதா மேரி நர்சரி பள்ளியில் வேலை பார்த்து வரும் கிறிஸ்டினா என்பவருக்கு என் தந்தை பணம் கொடுத்தார் என்றும், அவர் திருப்பிக் கொடுக்காததால் அவருக்கு ஆதரவாக இந்த வழக்கு பிரதிவாதிகள் செயல்பட்டார்கள் என்றும், அந்த காழ்ப்புணர்ச்சியில் இந்த பிரதிவாதிகளின் கையப்பத்தை ரியல் எஸ்டேட் செய்வதால் மோசடியாக உற்பத்தி செய்து என் தந்தை இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

3) எங்கள் பைனான்ஸ் நிறுவனத்தில் ராமமூர்த்தி,குமரேசன், அண்ணாதுரை,சந்திரன் என்பவர்கள் வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான் .குமார், ஜெயந்தி என்பவர்கள் வேலை பார்த்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எங்களிடம் வேலை பார்த்த ராமமூர்த்தி கிறிஸ்டினா என்பவரிடம் பணம் பெறுவது சம்பந்தமாக மதுரையில் பிரச்சனை ஏற்பட்டது என்றும், அதனால் நாங்கள் ராமமூர்த்தி மூலமாக மதுரையில் கிறிஸ்டினா மற்றும் இவ்வழக்கு பிரதிவாதிகள் மீது கரிமேடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விசாரணை பெற்று அந்த விசாரணை முடிக்கப்பட்டது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது.அதேபோல் எங்களிடம் வேலை பார்த்த குமரேசன் என்பவர் பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக கிறிஸ்டினா மற்றும் பிரதிவாதிகள் மதன் ஆகியோரிடம் பிரச்சனை ஏற்பட்டு அது சம்பந்தமாக கம்பம் வடக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு காவல் நிலைய குற்ற எண்680/2016 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதேபோல் மதுரை ஹாஸ்டின்பட்டி காவல் நிலையத்தில் எங்களிடம் வேலை பார்த்த அண்ணாதுரை மூலமாக மேற்படி நபர்கள் மீது புகார் கொடுத்து அந்த புகார் பொய்யானது என்பதால் குற்ற வழக்கு முடித்து வைக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4) பிரதிவாதிகள் பெயரில் உள்ள சொத்து பத்திரத்தின் சான்றிட்ட நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எங்களிடம் வேலை பார்க்கும் சந்திரன் என்பவர் மூலம் பிரதிவாதிகள் மீது தேனி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்95/2019 தாக்கல் செய்து அந்த வழக்கு இன்று வரை நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு

தெரியாது அவர்கள் சந்திரனிடம் வாங்கி இருக்கலாம். புரோநோட்டைய எழுதிய தயாளன் எங்களுடைய நிரந்தர எழுத்தாளர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது என் தந்தைக்கு தான் தெரியும். சந்திரன் தாக்கல் செய்த வழக்கிலும் உள்ள வழக்கு புரோநோட்டை தயாளன் நான் பூர்த்தி செய்துள்ளார் என்றால் அவர் ஆவண எழுத்தர் ஆக உள்ளதால் புரோநாட்டை எழுதிக் கொடுத்திருக்கலாம்.அதேபோல் சென்னை பெருநகர சிவில் நீதிமன்ற எண் 14 குமார் என்பவரை வைத்து நாங்கள் வழக்கு தாக்கல் செய்திருந்தோம் என்றும் OS1382/2018. அந்த வழக்கு மேல் நடத்தப்படாமல் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சார்பு நீதிமன்றத்தில் ஜெயந்தி என்பவர் மூலமாக அசல் வழக்கில்131/18 தாக்கல் செய்து அந்த வழக்கும் தொடர்ந்து மேல்நடத்தப்படாமல் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5) பிரதிவாதிகள் நிலங்களை வாங்கி வைக்கும் தொழில் செய்து வருகிறார்கள் என்றும் அவர்கள் எங்கெங்கெல்லாம் சொத்து வைத்துள்ளார்களோ அங்கெல்லாம் எங்களிடம் வேலை பார்க்கும் நபர்களை வைத்து வழக்கு தாக்கல் செய்து அவர்களுடைய கையெழுத்தை பத்திரத்தில் இருப்பதை பார்த்து நாங்கள் மோசடியாக தயார் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் எங்களிடம் வாங்கி கடனுக்கு தான் நாங்கள் தாக்கல் செய்துள்ளோம் அவர்களுடைய கையெழுத்தை வல்லுநர் ஆய்வின் மூலமாக நிறுவனம் செய்ய நான் தயாராக உள்ளேன். இவ்வழக்கு 2ம் பிரதிவாதி பூங்கொடி தமிழில் தான் கையொப்பம் போட்டுள்ளார். 25.12.2016ம் தேதி பூங்கொடி மற்றும் காந்தி மதுரை சென்னை சில்க்ஸ் ஜவுளி கடையில் ஜவுளி எடுத்துக் கொண்டிருந்தார் என்றும் இந்நிலையில் 11:30 மணிக்கு எங்கள் வீட்டிற்கு வந்து பணம் வாங்கிக்கொண்டு புரோநோட்டு எழுதி கொடுக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல.என் தந்தை மதுரை தேனி மாவட்டங்களில் பிரபல பைனான்சியர் என்றும், எங்களிடம் வேலை பார்த்த நபர்களை வைத்து பிரதிவாதிகள் மீது பல நீதிமன்றங்களில் வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றும், புரோநோட்டில் உள்ளது அவருடைய கையொப்பம் அல்ல என்றும், தொழில் போட்டியில் அவருடைய கையொப்பத்தை உற்பத்தி செய்து வழக்கை தாக்கல் செய்துள்ளதால் தான் வட்டி வேண்டாம் என்றும், இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.சென்னை மற்றும் தேவகோட்டையில் எங்களிடம் வேலை பார்த்த நபர்கள் வழக்கை மேல் நடத்த வரவில்லை என்றும் நான் தேனி மாவட்டத்தில் இருப்பதால் உத்தமபாளையம் நீதிமன்றத்தில் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றும், எனவே இந்த வழக்கு மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் தந்தை தாக்கல் செய்த வழக்கை அவர் இறந்து விட்டதால் நான் நடத்தி வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஓம் M.சிவாஜி செல்லையா,
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.